17th August 1963]

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
(பொன்னம்மாப்பேட்டை)

* 194 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் டவுன் பொன்னம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் (எஸ். நெ. 1171) 1959-ல் இருந்து 1962-வரை பணக்கையாடல் சம்பந்தமாக விசாரணை ஏதேனும் நடைபெற்றதா ?

(இ) கையாடல் சம்பந்தப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

(எ) இல்லையென்றால், ஏன் ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) பதினைந்தாயிரத்து அறுநூற்று நாற்பத்தாறு ரூபாயும் எண்பத்தியொன்று நயா பைசாக்களும் கையாடல் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

(உ) & (எ) இது விசாரணையில் இருக்கிறது.

திரு. க. ர. நல்லசிவம்: விசாரணை இன்னும் எத்தனை நாட்களில் நடைபெறும் ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அதைப் பற்றி நான் மேலும் ஒன்றும் சொல்வதற்கில்லை.

ஜூனியர் பாலிடெக்னிக் பள்ளிகள்

* 195 கேள்வி.—திரு. கே. நாராயணசாமிப்பிள்ளை: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் விருத்தாசலம், திட்டக்குடி முதலிய இடங்களில் ஜூனியர் பாலிடெக்னிக் பள்ளிகள் அமைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

Staff in the dispensaries of the dissolved District Boards.

* 196 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have regularised the services of the staff of the dispensaries of the erstwhile District Boards on a par with the services of the other staff of the Government Hospitals consequent on the transfer of the managements ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No, Sir.

கனம் திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: மாஜி ஜில்லா போர்டில் பணி செய்யும் பணியாளர்களுக்கும் கவர்ன்மெண்டு மருத்துவ மனையில் பணி செய்யும் பணியாளர்களுக்கும் தொழில் செய்வதில்